பொது நிருவாகச் சுற்றறிக்கைக் கடிதம் : 01/2023

எனது இலக்கம் : EST-3/UNI/04/0022
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.02.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

**<u>தொழிற் சங்கங்களுக்கு/சம்மேளனங்களுக்கு அரசாங்க ஊழியர்களை முழு நேர அடிப்படையில் விடுவித்தல்.</u>**

தாபனவிதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 4 மற்றும் 6 ஆம் பிரிவுகள் மற்றும் 1997.09.29 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 15/97 இன் பால் உங்களது கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

02. அதற்கிணங்க தொழிற் சங்கங்களிலும் தொழிற் சங்க சம்மேளனங்களிலும் செயல்படுவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்களை விடுவிக்கும் போது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாமை, உத்தியோகபூர்வ முத்திரை பதிக்கப்பட்டிருக்காமை மற்றும் உரிய முறையில் உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்காமை, உத்தியோகத்தரை முழு நேரமாக விடுவிப்பதற்கான முன்மொழிவுத் தீர்மானங்களை உள்ளடக்கிய கூட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்காமை மற்றும் விடுவிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான காலத்தைக் கடந்த பின்னர் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல் போன்ற காரணங்களினால் உத்தியோகத்தர்களை தொழிற் சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கும் போது தேவையற்ற தாமதங்கள் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

03. அதனால் கடிதத் தொடர்பாடல்களைக் குறைப்பதற்காகவும், விடுவிப்புச் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும் தொழிற் சங்கங்கள் மற்றும் தொழிற் சங்க சம்மேளனங்களுக்கு விடுவிக்கப்படும் உத்தியோகத்தர்களின் தகவல்களை உள்ளடக்கி மேற்குறிப்பிட்ட குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை நிவர்த்தியாக பூர்த்தி செய்து குறித்த விண்ணப்பங்களை விடுவிப்புக் காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்குமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ நீல் பண்டார ஹபுஹின்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-692159
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-iii@pubad.gov.lk